

# தம்பிஐயா தேவதாசின் படைப்புலகம்

என்.செல்வராஜா

# தம்பிஐயா தேவதாசின் படைப்புலகம்

**என்.செல்வராஜா**
நூலியலாளர்– லண்டன்

வெளியீடு:
அயோத்தி நூலக சேவைகள், ஆனைக்கோட்டை
(பிரித்தானியக் கிளை)

இணை வெளியீடு:
ஜீவநதி, கலைஅகம், அல்வாய், இலங்கை

2024

**தம்பிஜயா தேவதாசின் படைப்புலகம்**
*ஆசிரியர் - என்.செல்வராஜா*
*மின்னஞ்சல்* - Noolthettam.ns@gmail.com
*தொலைபேசி - (0044) 07817402704*
*பதிப்பு - முதற்பதிப்பு, 2024*
*பதிப்புரிமை © என்.செல்வராஜா 2024*
*வெளியீடு - அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம் &*
*ஜீவநதி வெளியீடு, கலைஅகம், அல்வாய், இலங்கை.*
*அச்சுப்பதிப்பு - பரணி அச்சகம்*
*அட்டை வடிவமைப்பு க. பரணீதரன்*
*பக்கங்கள் - 28*

**Literary World of Thambiaiyah Thevadas**
By N.Selvarajah
e-mail Noolthettam.ns@gmail.com
Mobile (0044) 07817402704
Edition - First Edition, 2024
Publishers - Ayothy Library Services, United Kingdom and
Jeevanathy Publication, Kalaiaham, Alvai, SriLanka
Printers - Baranee Printers
Cover Design - K.Bharaneetharan
ISBN - 978-955-0958-62-7
Pages - 28
Price: Rs 200.00

© Copy Right 2024 by N.Selvarajah
All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise

ஜீவநதி வெளியீடு – 340

# அணிந்துரை

*என்னைப் பற்றியும் எனது நூல்களைப் பற்றியும் பலரும் பல அறிமுகங்களையும் விமர்சனங்களையும் அவ்வப்போது ஊடகங்களில் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவற்றில் பல ஆக்கங்கள் முழுமையானதாக அமைந்திருக்கவில்லை என்பதை அவதானித்திருந்தேன். இலங்கையின் தமிழ்த் திரைப்படத் துறைபற்றி மட்டுமல்லாது, நாட்டாரியல், கல்வியியல், ஊடகவியல் போன்ற வேறும் பல துறைகளிலும் அவ்வப்போது நான் நூல்களை எழுதி வெளியிட்டுவந்துள்ளேன்.*

*நூலியலாளர் திரு என்.செல்வராஜா அவர்கள் அண்மையில் வீரகேசரி வாரமலரில் எனது நூல்களைப்பற்றி எழுதிய விமர்சனத்தைக் கண்டு மனம் மகிழ்ந்துபோனேன்.*

*எனது நூல்களின் மூலமாகவே என்னை அவர் அறிமுகப்படுத்தி யிருந்தார். அவ்வளவு தூரம் என்னையும் எனது எழுத்துப் பயணத்தையும் ஒட்டுமொத்தமாக முழுமையாக தகவல் திரட்டி அவற்றை ஆவணப்படுத்தும் வகையில் அவரது நீண்ட கட்டுரை மூன்று வாரங்களாக வெளிவந்திருந்தது. அத்தனை தூரம் ஆழமாகவும் அழகாகவும் அத்தொடரை திரு. என்.செல்வராஜா எழுதியிருந்தார்.*

*என்னைப்பற்றி இதுவரை காலத்தில் எழுதப்பட்ட விரிவானதும் ஆழமானதுமான அவரது கட்டுரைகளைத் தொகுத்து பாதுகாத்து வைக்க எண்ணியிருந்தேன்.*

*எனது விருப்பினை அவருடன் தொலைபேசியில் உரையாடும் வேளையில் தெரிவித்திருந்தேன். அதனை உள்ளூர உணர்ந்துகொண்டிருந்த திரு. செல்வராஜா அவர்கள் தனது கட்டுரையை ஒரு சிறு நூலாகத் தயாரித்து அச்சிட்டு எனக்கு வழங்க முன்வந்திருந்தார். இதுவே அந்தச் சிறுநூலாகும்.*

*இப்படியானதொரு நூலை எனக்கு உளமகிழ்வுடன் உருவாக்கித் தந்துள்ள திரு. என்.செல்வராஜா அவர்களுக்கு பலகோடி நன்றிகள்.*

*அன்புடன்*

*தம்பிஐயா தேவதாஸ்*
***90/9*** *புதிய செட்டித்தெரு*
*கொழும்பு* ***-13***
*இலங்கை*

# என்னுரை

*திரு. தம்பிஐயா தேவதாஸ் அவர்கள் நான் இலங்கை யில் வாழ்ந்த காலங்களிலிருந்து சுமுகமான நல்லுறவினை என்னுடன் பேணி வருபவர். 1992இல் நான் குடும்பத்தினரு டன் புலம்பெயர்ந்த பின்னரும்கூட அவரது தொடர்பு அறுந்துவிடவில்லை. பழகுவதற்கு மிகவும் இனிமை யானவர்.*

*தனது படைப்பாக்கங்கள் அனைத்தையும் அது இலங்கையில் வெளிவந்த சூடு தணியும் முன்பே தபாலில் எனக்குக் கிடைக்கத்தக்கதாக அவற்றை அனுப்பி வைத்து விடும் பழக்கம் அவருக்கு உண்டு. இது நான் ஈழத்து எழுத்தாளர்களிடம் நான் அபூர்வமாகக் காணும் ஒரு பண்பு. திரு. தேவதாஸ் லண்டனுக்கு வரும் ஒவ்வொரு தடவையும் என்னை நேரில் சந்தித்து உறவாடி எம்மை மகிழ்வூட்டுவார்.*

*நான் தாயகத்துக்கு வருகை தரும் வேளைகளி லெல்லாம் என்னைச் சந்தித்து இலங்கை வானொலியில் என்னுடனான நேர்காணல்களை எப்படியாவது ஒழுங்கு செய்து விடுவார். அவரைப் பற்றிய இந்தக் கட்டுரைத் தொடரை நான் எழுத முற்பட்ட வேளையில் அவரது அனைத்து நூல்களும் என் கைகளில் இருந்தமையால் அந்த நூல்களினூடாகவே அவரை வாசகர்கள் தரிசிக்கும் வகையில் அவரது வாழ்வும் பணியும் பற்றி எழுதுவதில் சிரமமெதுவும் எனக்கு இருக்கவில்லை.*

*தேவதாஸ் அவர்கள் எம்மிடையே வாழும் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம் என்பேன். குறிப்பாக, ஈழத்துத்*

தமிழ் சிங்களத் திரைப்படத்துறை சார்ந்த ஏராளமான ஆவணங்களையும், புகைப்படங்களையும் பேணிப் பாது காத்து வைத்திருக்கும் ஒரு பெட்டகம் அவர் என்றால் அது மிகையாகாது. இலங்கை வானொலியின் தமிழ்ப் பிரிவின் களஞ்சியத்திலிருந்த பல ஆவணங்கள், குறிப்பாக அங்கிருந்த நாடக எழுத்துப் பிரதிகள், ஈழத்துத் திரைப்பட ஒலி நாடாக்கள் என ஏராளமான முதுசொங்கள் படிப்படியாக அழிந்துவிட்ட நிலையில் இத்தகைய தனிமனித ஆவணக் காப்பாளர்களின் தோள்களிலேயே எமது சமூகம் தன் இனத் துக்கான வரலாற்றை பேணிப்பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றி வைத்துவிட்டு தமது கடமைகளை செய்துவிட்டதாக திருப்திப்பட்டுக்கொள்கின்றது. தனிமனித ஆவணக்காப் பாளர்கள் பலரின் மறைவின் பின்னர் அவர்களது அரிய சேகரிப்புகளும் சிதறுண்டு படிப்படியாக காணாமலாக்கப் பட்டு விடுகின்றன.

தனிமனிதனாகச் செயற்படும் தம்பிஜயா தேவதாஸ் அவர்களின் அரிய சேகரிப்புகள் எதிர்காலத்தில் நூலகம் நிறுவனம் போன்ற அமைப்புக்களால் மின்வருடல் செய்யப் பட்டு பேணப்படவேண்டும். அதற்கான முன் முயற்சிகளை நிறுவனத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் இதயசுத்தியுடனும், சமூக அக்கறையுடனும் மேற்கொள்ளவேண்டும்.

இச்சிறு நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரை முன்ன தாக வீரகேசரி வாரமலரின் **25.2.2024** முதல் **10.03.2024** வரையான மூன்று ஞாயிறு பதிப்புகளில் பிரசுரமாகி யிருந்தன. எனது கட்டுரைகளை **23.10.2022** முதல் வாரம் தவறாமல் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை களிலும் பிரசுரித்துவரும் வீரகேசரி நிர்வாகத்தினருக்கு, குறிப்பாக திரு ஸ்ரீகஜன் மற்றும் அவரது குழுவினருக்கு இத்தருணத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்

என்.செல்வராஜா

noolthettam.ns@gmail.com

# தம்பிஐயா தேவதாஸ் - ஈழத்தின் திரைப்படத்துறையில் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம்

## அறிமுகம்

*சிங்களத் திரைப்படத்துறை வளர்ச்சியுற்ற அளவு தமிழ்த் திரைப்படத்துறை இங்கு முன்னேறவில்லை என்பதை அனைவரும் அறிவோம். சிங்களத் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு படிக்கல்லாக அமைந்திருந்தவர்களில் பலர் தமிழர்கள் என்பதை வரலாறு எமக்குச் சொல்கின்றது. இத்தகைய ஈழத்தின் திரைப்படத்துறை சார்ந்த நடமாடும் கலைக்களஞ்சியமாக எம்மிடையே வலம்வருபவர் திரு தம்பிஐயா தேவதாஸ். அவரைப் பற்றிய சிறு அறிமுகத்துடன் அவரது நூல்கள் பற்றிய குறிப்புகளை இக்கட்டுரையில் பகிர்ந்து கொள்கின்றேன்.*

*திரு தம்பிஐயா தேவதாஸ், யாழ்ப்பாணம் புங்குடு தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 24.04.1951 இல் பிறந்த இவர், யாழ்ப்பாணம் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம், கொழும்பு விவேகானந்தா மகாவித்தி யாலயம், கொழும்பு அலெக்சான்ட்ரா கல்லூரி ஆகிய வற்றின் பழைய மாணவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல், தமிழ், இந்து கலாச்சாரம் ஆகிய பாடங்களைப் பயின்று பட்டம் பெற்றவர். பின்னர் மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தில் கல்வி டிப்ளோமா பட்டத்தை யும் பெற்றுக்கொண்டார்.*




கொழும்பு, கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த தமிழ் வித்தியாலயம், கொழும்பு 12- கணபதி இந்து மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றில் பின்னாளில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். தம்பிஐயா தேவதாஸ் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பத்திரிகையியலில் டிப்ளோமா பட்டமும் பெற்றவர். இவரது இந்தத் துறைசார் கல்வியே பின்னாளில் இவரைப் பல்வேறு பத்திரிகைகளிலும் சினிமாத்துறை சம்பந்தமான ஆக்கங்களை எழுதத் தூண்டியிருக்கின்றது என்று நான் கருதுகின்றேன். இலங்கை வானொலி அறிவிப்பாளராகவும், ரூபவாஹினியில் கல்விச் சேவை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவராகவும், சுயாதீனத் தொலைக்காட்சியில் சினிமாத்துறை நிகழ்ச்சிகளை வழங்குபவராகவும் இவர் தனது ஊடகப்பணியை மேற்கொண்டு வந்துள்ளார்.

இவரது எழுத்துத்துறை ஈடுபாடு 1971ஆம் ஆண்டு தனது 20ஆவது வயதில் மல்லிகை சஞ்சிகையில் “நற்சாட்சிப் பத்திரம்” என்ற சிறுகதையுடன் தொடங்கியுள்ளது என்று “இவர்கள் நம்மவர்கள்” எழுத்தாளர் விபரத்திரட்டில், அமரர் பீ.எம்.புன்னியாமீன் பதிவுசெய்துள்ளார்.

## மொழிபெயர்ப்புத்துறை

நூல்வழியாக தம்பிஐயா தேவதாஸ் அவர்களின் அறிமுகம் 1976இல் நிகழ்கின்றது. அவரது முதல் மூன்று நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

“கொலு ஹதவத்த” என்ற தலைப்பில் கருணாசேன ஜயலத் சிங்கள மொழியில் எழுதிய பிரபல நாவல், தம்பிஐயா தேவதாஸ் அவர்களால் 'நெஞ்சில் ஓர் இரகசியம்” என்ற தலைப்பில் 46ஆவது வீரகேசரி பிரசுரமாக ஒக்டோபர் 1976இல் வெளியிடப்பட்டிருந்தது. விடலைப் பருவக் காதலை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட கதை இது. சிங்களமொழியில் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிசின் இயக்கத்தில் திரைப்படமாகவும், பின்னர் மேடைநாடகமாகவும் தயாரிக்கப்பட்டது.

நெஞ்சில் ஓர் இரகசியம் என்ற நாவலின் இரண்டாம் பாகமாகக் கருதப்படும் மற்றொரு நாவலை கருணாசேன ஜயலத் சிங்கள மொழியில் எழுதியிருந்தார். 'இறைவன் வகுத்த வழி” என்ற தலைப்பில் அந்நாவலை தம்பிஐயா தேவதாஸ் தமிழாக்கம் செய்து வழங்கியிருந்தார். இம்மொழிபெயர்ப்பு நாவல், 67ஆவது வீரகேசரி பிரசுரமாக ஜ/ன் 1978இல் வெளி வந்திருந்தது. இந்நாவல் பின்னாளில் திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டது. சிங்கள இலக்கியத்தில் பிரபல்யமான கருணாசேன ஜயலத் ஹொரணையில் கும்புகே என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். தனது 45ஆவது வயதில் அவர் மறைவதற்கு முன்னர் நூற்றுக்கும் மேற்பட்ட படைப்புக் களை சிங்கள இலக்கியத்துக்கு அவர் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தம்பிஐயா தேவதாஸ் மொழிபெயர்த்த மூன்றாவது நாவல் “ மூன்று பாத்திரங்கள் ”என்ற தலைப்பில் சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பகத்தினரால் ஜூன் 1979இல்

*வெளி யிடப்பட்டது. மேற்படி நாவலின் சிங்கள மூலம் கே.ஜயதிலக என்பவரால் "சரித்த துனக்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்தது.*


***27.6.1926** இல் கம்பஹா, கண்ணிமஹர கிராமத்தில் பிறந்த கே.ஜயதிலக மஹகமசேகர மஹா வித்தியாலயம் என்று அழைக்கப்படும் கிராமத்துப் பாடசாலையிலே தனது ஆரம்பக் கல்வியைப்பெற்றார். **1941** இல் அவர் பாடசாலை மாணவனாக இருந்த போதே ஒரு கவிதைத் தொகுப்பை உருவாக்கி அதை **1970** ஆம் ஆண்டு வெளியிட்டார். **1959** ஆம் ஆண்டிலேயே இவரது முதல் நாவல் வெளிவந்தது. "பராஜிதயோ" (தோற்றுப் போனவர்கள்) என்ற தலைப்பில் இந்த நாவல் வெளிவந்தது. இதனை அடுத்து இவர் எழுதி **1970** இல் வெளியிட்ட "சரித்த துனக்" என்னும் நாவலே இங்கு "மூன்று பாத்திரங்கள்" என்ற தலைப்பில் தமிழாக்கம் கண்டுள்ளது. வாசகர்களினதும் விமர்சகர்களினதும் பெரும் வரவேற்பை பெற்ற மூலநாவல், தற்போது அதன் இருபதாவது பதிப்பையும் தாண்டிவிட்டது.*

## இலங்கையின் திரைப்படத்துறை

*இன்று இலங்கைத் தமிழ்ச் சினிமா பற்றி ஆதார பூர்வமாகப் பேசக்கூடிய நமது தமிழ் எழுத்தாளர்களுள் தம்பிஐயா தேவதாஸ் அவர்கள் மிக முக்கியமானவர். ரொசாரியோ பீரிஸ், சில்லையூர் செல்வராஜன், ஒகஸ்டின் மொராயஸ், தமிழ்நெஞ்சன் ஜெயசீலன் போன்ற தமிழ் கலைஞர்களுக்கும் இலங்கைச் சினிமா பற்றிய தகவல்கள் நிறையவே தெரிந்திருந்த போதிலும் எவரும் இத்துறையில் நூலாக அவற்றை ஆவணப்படுத்தி வெளியிட அவர்களது காலத்தில் முன்வரவில்லை என்பது பெரும் குறையாகும்.*

*வெறும் கவர்ச்சிக்காக தென்னிந்திய சினிமாச் செய்தி களுக்கு முக்கியமளித்து, அதனை ஜனரஞ்சகமயப்படுத்தும்*

வர்த்தக நோக்குடன் பக்கங்களை வண்ணக் கலவையில் இட்டு நிரப்பிய ஈழத்துச் சினிமா பத்திரி கைகளும் ஈழத்துத் தமிழ் சினிமா பற்றிய ஆவணமாக்கல் நோக்கி லான முயற்சி எதையும் மேற் கொள்ளவில்லை என்பது கசப் பானதொரு உண்மையாகும்.




தமிழகத்தில் பேசும்படம், பொம்மை என்று நிறையவே இருந்த மாதிரி 1950களின் பின்னர், இலங்கை சினிமாஸ் லிமிட்டெட் தாபனத்தாரின் “சினி பில்ம்ஸ்” என்ற ஆங்கிலச் சஞ்சிகை எம்.டி.யேசுரத்தினம், ஏ.ஆர்.ஆசீர்வாதம் ஆகியோரை, ஆசிரியராகக் கொண்டு இயங்கியது. “சிலோன் சினிமா” என்ற பத்திரிகை கே. யோகராஜாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இவற்றில் ஆங்காங்கே ஈழத்துத் தமிழ்சினிமா, அதன் பின்னணியில் இருந்தோர் என்று பரவலாகச் செய்திகள் வெளிவந்திருந்தாலும் தம்பி ஐயா தேவதாஸ் 1994-2023 காலப்பகுதியில் வெளியிட்ட இலங்கைத் திரையுலகம் தொடர்பான வரலாற்றாதார நூல்கள் எவையும் இலங்கை யில் முன்னெப்போதும் வெளிவரவில்லை என்றே கூறலாம்.

இலங்கைத் திரைப்படத்துறை சார்ந்த இவரது முதலாவது நூலாக நான் கருதுவது 1994இல் வெளிவந்த 'இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை” என்ற நூலாகும். சென்னை, காந்தளகம் பதிப்பகத்தினரால் முதல் பதிப்பினை இந்நூல் மார்கழி 1994இல் கண்டிருந்தது. இதன் இரண்டா வது பதிப்பு 2000ஆம் ஆண்டில் வீ.எஸ்.துரைராஜாவின் வீ.எஸ்.ரீ. பதிப்பகத்தின் மூலம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நூலின் முதற்பதிப்பில் 1993 வரையிலான ஈழத்துத் தமிழ்ச் சினிமாவின் வரலாறு தொகுக்கப்

*பட்டிருந்தது. இரண்டாவது பதிப்பில் 2000 வரையிலான வரலாறு மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கை தமிழ்ச் சினிமாவின் ஆரம்பம், சமுதாயம், தோட்டக்காரி, கடமையின் எல்லை, பாச நிலா, டாக்சி டிறைவர், நிர்மலா, மஞ்சள் குங்குமம், வெண் சங்கு, குத்து விளக்கு, மீனவப் பெண், புதிய காற்று, கோமாளிகள், பொன்மணி, காத் திருப்பேன் உனக்காக, நான் உங்கள் தோழன், வாடைக் காற்று, தென்றலும் புயலும், ஏமாளிகள், அநுராகம், எங்களில் ஒருவன், மாமியார் வீடு, நெஞ்சுக்கு நீதி, இரத்தத் தின் இரத்தமே, அவள் ஒரு ஜீவநதி, நாடு போற்ற வாழ்க, பாதை மாறிய பருவங்கள், ஷர்மிளாவின் இதய ராகம், தமிழ்ப்படங்களாக மாறிய சிங்களப் படங்கள், முடிவுரை ஆகிய தலைப்புகளில் இவ்வரலாறு பதிவுசெய்யப் பட்டுள்ளது. இதன் பெரும்பகுதி தினகரனிலும், சிறுபகுதி வீரகேசரியிலும் முன்னர் வெளிவந்துள்ளன. இக்கட்டுரை களின் முழுமையான தொகுப்பாக நூலுருவில் வெளி வந்துள்ளது. நூலின் சுருக்கம் கருதி, இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்புக்கள் பற்றியும் சினிமாச் சஞ்சிகைகள் பற்றியும் சொல்லப்படவில்லை என்று ஆசிரியர் குறிப் பிட்டுள்ளார். இலங்கை தமிழ்ச் சினிமாவின் வரலாறு பற்றி விரிவாகக் கூறும் முதல் முயற்சி இதுவாகும்.*

*திரைப்படத்துறை சார்ந்த இவரது இரண்டாவது நூலாக ஜனவரி 2000இல் வெளிவந்த* “பொன்விழாக்கண்ட சிங்களச் சினிமா” *என்ற நூல் 1947 முதல் 1997 வரையிலான 50 ஆண்டு காலங்களில் சிங்கள சினிமாவுக்குத் தம் வாழ்வை அர்ப்பணித்த தமிழ் முஸ்லிம் கலைஞர்கள் பற்றிய செய்திகள், அவர்களது புகைப்படங்களுடன் இங்கே தம்பிஐயா தேவதாஸ் எவ்வித பூச்சுக்களுமின்றி நேரிடையாகவே தகவல் களைத் தொடர்ச்சியாகத் தந்துள்ளார். 163 பக்கங்களிலான இந்நூல் கொழும்பு புதுச்செட்டித்தெருவில் உள்ள “வித்தியா தீபம்” என்ற அவரது வெளியீட்டகத்தினால் வெளியிடப்*

பட்டுள்ளது.




சிங்களத் திரையுலகம் பற்றிய தகவல்களை இந்நூலில் படிக்கும் போது அதற்காக இனமத வேறுபாடு கடந்து பாடுபட்ட தமிழ்க் கலைஞர்களின் பங்களிப்பு வியக்க வைக்கின்றது. கூடவே இவர்களால் ஏன் இதுவரை ஈழத்துத் தமிழ்ச் சினிமாவை வளர்த் தெடுக்க முடியாமல் போனது என்ற கேள்வியும் கூடவே எழுந்து தொலைக் கின்றது. எமது தனித்துவத்தை மறந்து பெரும்பான்மையான தென்னிந்திய சினிமா உலகின் மசாலாத்தனமான போக்கைப் பின்பற்ற முயன்றதும் இத்தகைய கரையொதுங்கலுக்குக் காரணம் என்று நான் கருதுகின்றேன்.

இங்கு நாம் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம், முதலாவது சிங்களப்படத்தைத் தயாரித்தவர் என்ற பெருமை எஸ். எம்.நாயகம் என்ற தமிழரையே சாரும். சிங்கள சினிமா வின் சில முக்கியமான வரலாற்றுக் கட்டங்களையும், அக் காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம் கலைஞர்கள் பின்னணியில் நின்று ஆற்றிய சேவைகளையும் இந்நூலில் திரு தேவதாஸ் விலாவாரியாக விபரித்துள்ளார்.

தம்பிஐயா தேவதாஸ் அவர்களின் திரைப்படத் துறை பற்றிப் பேசும் மூன்றாவது நூல் "இலங்கைத் திரையுலக முன்னோடிகள்" என்பதாகும். முதலாம் பாகமாக வெளி வந்திருக்கும் இந்நூலையும் கார்த்திகை 2001இல் சென்னை காந்தளகத்தினர் வெளியிட்டுள்ளனர். மொத்தம் 245 பக்கங் கள் கொண்ட இந்நூலில் இலங்கையில் தமிழ் சினிமாவிலும் சிங்களச் சினிமாவிலும் பங்காற்றிய 40 கலைஞர்களைப் பற்றிய பல தகவல்கள் காணப்படுகின்றன. இந்த 40 பேரில் ஒருவர் தவிர்ந்த மற்றைய அனைவரும் தமிழர்கள் என்பது


குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முதல் சிங்களப்படத்தைத் தயாரித்த தமிழரான எஸ்.எம்.நாயகம் பற்றிய வரலாற்றுத் தகவல் முதலாவதாக அமைகின்றது. 40 கலையுலக முன்னோடி களில் ஹென்றி சந்திரவன்ச என்ற ஒரே ஒரு சிங்களக் கலைஞர் பற்றிய வரலாற்றுத் தகவலை இந்நூலில் சேர்த்திருந்தார். அதன் முக்கியத்துவம் என்னவாக இருக்கும் என்ற நோக்கில் பக்கத்தைத் திருப்பிய எனக்கு அங்கே சுவாரஸ்யமான செய்தி ஒன்று காத்திருந்தது. இலங்கையின் முதலாவது தமிழ்ப் படத்தைத் தயாரித்தவர் இவராம். 1951இல் மலையகத்தில் இவர் “சமுதாயம்” என்ற திரைப்படத்தைத் தயாரித்து பிரத்தியேக தியேட்டரிலும், பாடசாலைகளிலும் காட்டிய தாக இதில் செய்தியுள்ளது.

இந்நூலில் எஸ்.எம்.நாயகம், சேர்.சிற்றம்பலம் ஏ.கார்டினர், பி.எஸ்.கிருஷ்ணகுமார், டபிள்யூ.எம்.எஸ். தம்பு, ரீ.சோமசேகரன், கே.குணரெத்தினம், எம்.வேத நாயகம், ஜாபீர் ஏ.காதர், லெனின் மொறாயஸ், ஜோ.தேவானந், ஏ.வீ.எம்.வாசகம், ஹெலன் குமாரி, ஏ.ஜே.வின்சன், எம்.மஸ்த்தான், ருக்மணிதேவி, வீ.பீ.கணேசன், கே.தவமணிதேவி, மொஹிதீன் பெக், ஏ.எஸ்.ராஜா, எஸ்.என்.தனரெத்தினம், வீ.எஸ்.முத்துவேலு ரஞ்சனி தம்பதிகள், ஆர்.முத்துசாமி, அன்ரன் கிரகரி, எம்.கே.றொக்சாமி, றொபின் தம்பு, எஸ்.ராமநாதன், கே.எஸ்.பாலச்சந்திரன், எம்.எஸ்.ஆனந்தன், ஈழத்து ரெத்தினம், கே.பி.கே.பாலசிங்கம், வி.எஸ்.துரைராஜா, கே.வெங்கட், எஸ்.ஏ.அழகேசன், ஏ.ரகுநாதன், எம்.வி.பாலன், வீ.வாமதேவன், எம்.ஏ.கபூர், டென்மார்க் சண், எஸ்.வி.சந்திரன்ஆகிய 39 தமிழ்க் கலைஞர்கள் பற்றிய தும் ஹென்றி சந்திரவன்ச என்ற சிங்களக் கலைஞர் பற்றியதுமான தரவுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இலங்கைச் சினிமா பற்றிய தமிழ் நூல்கள் இல்லாத

நிலையில் தேவதாஸ் அவர்கள் எழுதி 1994இல் வெளிவந்த திரைப்படத்துறை சார்ந்த அவரது முதலாவது நூலான "இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை", இரண்டாவது நூலாக ஜனவரி 2000இல் வெளிவந்த 'பொன்விழாக் கண்ட சிங்களச் சினிமா", 2001இல் வெளிவந்த மூன்றாவது நூலான 'இலங்கைத் திரையுலக முன்னோடிகள்" ஆகிய மூன்று நூல்களும்




நம்பகமான வரலாற்றாதாரங்களாக அமைந்திருந்தன. ஏராளமான அரிய பல புகைப்படங்களுடன் இந்நூல்கள் வெளிவந்து திரைப்படத்துறையில், குறிப்பாக ஈழத்துத் திரைப்படத் துறையில் ஆர்வம் கொண்டவர்களுக்கு அரிய ஆவணங் களாக அமைந்திருந்தன. இவை திரு தம்பிஐயா தேவதாஸ் அவர்களின் பால் ஒரு கவன ஈர்ப்பினை ஏற்படுத்தி, ஈழத்துத் திரைப்படத்துறை சார்ந்த இன்னும் பல நூல்களை அவரிடம் வாசகர்கள் எதிர்பார்க்க வைத்தது. இதன் பயனாக செப்டெம்பர் 2007இல் மற்றுமொரு திரைப்படத்துறை சார்ந்த நூலை "இலங்கைத் திரையுலக சாதனையாளர்கள்" என்ற தலைப்பில் அவரை எழுதி வெளியிடத் தூண்டியது.

'இலங்கைத் திரையுலக சாதனையாளர்கள்' என்ற நூலை தம்பிஐயா தேவதாஸ், கொழும்பு 13இலிருந்து தனது வித்தியாதீபம் பதிப்பகத்தின் வாயிலாக செப்டெம்பர் 2007 இல் வெளியிட்டிருந்தார். லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் முதல் இந்திராதேவி புள்ளே வரை 36 ஈழத்துத் திரைப்படத்துறையினரின் கலைத்துறை வாழ்வும் பணிகளும் இந்நூலில் புகைப்பட ஆதாரங்களுடன் தொகுக்கப்பட்டுள்ளன. லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், சினிமாச் சக்கரவர்த்தி காமினி பொன்சேகா, சினிமா ராணி மாலினி பொன்சேகா,

சினிமாவை வளர்த்த தீவகத் தலைமகன் அல்பிரட் தம்பிஐயா, பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராஜன் (193-1995), கலைத்தம்பதியர் சுண்டிக்குளி சோமசேகரன், மாலினிதேவி சோமசேகரன், கலாஜோதி "சானா" எஸ்.சண்முகநாதன், எஸ்.பி.எம். ஸ்ருடியோ ஸ்தாபகர் அன்று முத்தையா, டொக்டர் வேதநாயகம், காசிம் காக்கா ரொசாரியோ பீரிஸ், மறைந்தும் மறையாத கலைஞர் ஸ்ரீசங்கர், கம்பீர நடிகன் தேவன் அழகக்கோன் (1936-1992), நடிகவேள் லடீஸ் வீரமணி, அபு.நானா கே.ஏ.ஜவாஹர், இலங்கை இந்திய கலைப்பாலம் ஏ.நெயினார், கட்டிடக் கலைஞர் வீ.எஸ்.துரைராஜா, கலாசூரி கௌரீஸ்வரி ராஜப்பன், கலாபூஷணம் ஏ.ஏ.ஜூனைதீன், மலையகம் தந்த மணிக் கலைஞர் சிலோன் சின்னையா, கலைச் செல்வி சந்திரகலா, உபாலி எஸ்.செல்வசேகரன், கலாபூஷணம் எம்.உதயகுமார், கலா விநோதன் சித்தி அமரசிங்கம், பொப் இசைச் சக்கரவர்த்தி ஏ.ஈ.மனோகரன், உலகப் பிரசித்தி பெற்ற சினிமா இயக்குநர் சந்திரன் ரெத்தினம், மரிக்கார் எஸ்.ராம்தாஸ், டொக்டர் இந்திரகுமார், கலாபூஷணம் கலைச்செல்வன், கலாபூஷணம் கே.எம்.சவாஹிர், மாத்தளை கார்த்திகேசு, எம்.என்.சிவராம், கண்டி எஸ்.விஸ்வநாதராஜா, பரீனாலை, கலைஞர் கே.மோகன்குமார், கலைஞர் எம்.ஏகாம்பரம், கலைமகள் இந்திராதேவிப்புள்ளே ஆகிய தலைப்புகளில் அவர்களது வாழ்வும் பணிகளும் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆரம்பகால ஈழத்துத் தமிழ்த் திரைப்படத் துறையில் பெரும்பங்காற்றி மறைந்தவர்களும், திக்கெட்டும் புலம்பெயர்ந்து சிதறிப் போனவர்களும் இந்நூலில் நன்றியுடன் நினைவுகூரப்பட்டுள்ளார்கள்.

1956இல் ஆரம்பிக்கப்பட்ட ஈழத்து தமிழ்த் திரைப்பட முயற்சிகளின் தொடர்ச்சியாக, 1971ம் ஆண்டு இலங்கையின் பிரபல கட்டிடக்கலைஞர் வி.எஸ்.துரைராஜா "குத்துவிளக்கு" என்ற திரைப்படத்தைத் தயாரித்தார். அது

அக்காலத்தில் பிரபல்யமான நடிகர்கள் நடிப்பில் வெளியாகி யிருந்த தென்னிந்திய திரைப் படங்களுடன் போட்டியிட்டு, 1972இல் திரைக்கு வந்தது. வானம்பார்த்த பூமியை நம்பி வாழும் யாழ்ப்பாணத்து விவசாயி யின் பொருளாதாரப் பிரச்சினை, சீதனம், சாதிப்பிரச்சினைகள், கிராமத்துப் பெண்களின் மனதில் உருவாகும் உண்மைக்காதல், பணக்கார இளைஞர்களின்




பொழுதுபோக்குக் காதல் எனப் பல்வேறு விடயங்கள் இதில் பேசப்பட்டன. லீலா நாராயணன், ஜெய காந்த் (நமசிவாயம்) ஆகியோர் பிரதான பாத்திரங்களில் நடித்தனர். தயாரிப்பாளர் வழங்கிய பல்வேறு ஆவணங் களை அடிப்படையாக வைத்து இந்நூல் வழியாக ஈழத்துத் தமிழ்த்திரைப்பட வரலாற்றின் ஒரு பகுதியை தம்பிஐயா தேவதாஸ் அவர்கள் 2010இல் திரைப்படத்துறை சார்ந்த தனது ஐந்தாவது நூலாக "குத்துவிளக்கு: இலங்கைத் தமிழ்த் திரைப்படம்: மீள்வாசிப்பு" என்ற தலைப்பில் ஆவணப்படுத்தி யுள்ளார். சென்னை மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ் என்ற அச்சகத்தில் அச்சிடப்பெற்று அவரது "வித்தியாதீபம்" பதிப்பகத்தின் வாயிலாக இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது.

ஈழத்துத் திரைப்படத்துறையின் முக்கிய பிரிவான திரை இசை தொடர்பான நூல் "இலங்கை திரை இசையின் கதை" என்ற திரைத்துறை சார்ந்து வெளிவந்த இவரது ஆறாவது நூலாகும். இது செப்டெம்பர் 2012இல் வித்யாதீபம் வெளியீடாக கொழும்பிலிருந்து வெளிவந்தது.

இலங்கைத்தீவின் தமிழ்த் திரை இசையின் கதையைச் சொல்லும் இந்நூல் 30 அத்தியாயங்களில் விரிகின்றது. திரை

இசையின் கதை என்ற அறிமுக இயலைத் தொடர்ந்து 29 தலையங்கங்களும் சமுதாயம், தோட்டக்காரி, குசுமலதா, கடமையின் எல்லை, டக்சி டிரைவர், நிர்மலா, மஞ்சள் குங்குமம், வெண்சங்கு, குத்துவிளக்கு, மீனவப் பெண், புதிய காற்று, கோமாளிகள், பொன்மணி, காத்திருப்பேன் உனக்காக, நான் உங்கள் தோழன், வாடைக்காற்று, தென்ற லும் புயலும், தெய்வம் தந்த வீடு, ஏமாளிகள், அனுராகம், எங்களில் ஒருவன், மாமியார் வீடு, நெஞ்சுக்கு நீதி, இரத்தத் தின் இரத்தமே, அவள் ஒரு ஜீவநதி, பாதை மாறிய பருவங் கள், நாடு போற்ற வாழ்க, இளைய நிலா, சர்மிளாவின் இதய ராகம் ஆகிய ஈழத்துத் திரைப்படங்களின் தலைப்புகளின்கீழ் அவ்வத்திரைப் படங்களின் திரை இசை பற்றிய விரிவான பார்வையை இவை பதிவுசெய்கின்றன. இத்திரைப்படங் களின் பாடல்கள் பல இன்று இலங்கை வானொலியின் காப்பகத்தில் பாதுகாக்கப்படாமல் இல்லாதொழிந்து போன அவல நிலையில் தம்பிஐயா தேவதாசின் கடினமான தேடலின் பயனாக எழுத்துருவிலாவது அவற்றின் வரலாற்றைப் பார்வையிட எமது தலைமுறையினருக்கு பார்வையிடக் கிடைத்திருப்பதற்காக ஆசிரியருக்கு ஈழத்துத் தமிழ்த் திரைத்துறை வரலாற்று ஆய்வாளர்கள் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளனர். அவ்வகையில் இந்நூல் வரலாற்று முக்கியத்துவம் பெறும் முதன்மை ஆவணமொன்றாகின்றது.

**'இலங்கை சினிமாவின் ஆரம்பம்''** என்ற நூல், தம்பிஐயா தேவதாஸ் அவர்கள் திரைப்படத்துறை சார்ந்து எழுதிய ஏழாவது நூலாகும். 2016இல் முதற்பதிப்பைக் கண்ட இந்நூலும் ஒரு வித்தியாதீபம் பிரசுரமாகும். இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் தினக்குரல் வாரமலரிலும் வீரகேசரியின் கலைக்கேசரியிலும் சங்கமத்திலும் வெளி வந்திருந்தன. இலங்கையில் சினிமா அறிமுகம். சிங்களச் சினிமாவின் உதயம், முதலாவதாகத் தயாரிக்கப்பட்டும் நான்காவதாக வெளிவந்த படம், இலங்கைச் சினிமாவில்

இந்தியக் கலைஞர்கள், சிங்களச் சினிமாவை வளர்த்த இலங்கைத் தமிழர்கள், இலங்கைச் சினிமாவில் தந்தை-மகன்-பேரன், எழுபது களில் இலங்கைச் சினிமா, இலங் கையில் உருவான ஸ்ரூடியோக்கள், இலங்கை சினிமாவை வளர்த்த எம்.மஸ்தானும், ஏ.எஸ்.ஏ.சாமி யும், எம்.வி.பாலனும் அன்ரன் கிரகரியும், ஒரே கதை இரண்டு படங்கள், சிங்களப் படங்களில் தமிழ் முஸ்லீம் நடிகைகள் ஆகிய 12 தலைப்புக்களில் இவை ஒழுங்குபடுத்தித் தனி நூலாக அமைக்கப்பட்டுள்ளன.




**'இலங்கை சினிமாவில் ருக்மணிதேவியும் எஸ்.எம்.நாயகமும்'** என்ற தலைப்பில் தம்பிஜயா தேவதாஸ் எழுதி வெளியிட்டுள்ள அண்மைக்கால நூலே திரைப்படத்துறை சார்ந்த இவரது எட்டாவது நூலாகும். இது 2023இல் கொழும்பு 10, எஸ்.கொடகே நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ருக்மணிதேவி ஒரு தமிழ்ப் பெண், நாடக நடிகை ருக்மணிதேவி, இலங்கையின் முதலாவது திரைப்பட நாயகி, ருக்மணிதேவி நடித்த தமிழ்ப்படம், ருக்மணிதேவி பாடிய தமிழ்ப் பாடல்கள், பல பாடல்கள் இடம்பெற்ற தமிழ்ப்படம், இலங்கைத் தமிழ்ப்படங்களில் ருக்மணிதேவி, கிராமபோன் பாடகி ருக்மணிதேவி, இலங்கைக் குயில் ருக்மணிதேவி, இரட்டை வேடம் அறிமுகமான முதலாவது சிங்களப் படம், முதலாவது சிங்களப்படத்தை தயாரித்த எஸ்.எம். நாயகம், எஸ்.எம். நாயகத்தின் இளமைக்காலம், எஸ்.எம். நாயகத்தின் படம் ஒளிப்பதிவு, நடிகர்களின் அனுபவங்கள், முதலாவது சிங்களப்படம், முதலாவது சிங்கள படம் பற்றிய விமர்சனம், சிங்களப் படத்தில் கே.தவமணிதேவி, எஸ்.எம். நாயகம் தயாரித்த “கடல் கடந்த தமிழன்”, ஆர்.முத்துசாமிக்கு வெற்றி

*வாங்கிக் கொடுத்த "பிறேம தரங்கய" என்ற படம், எஸ்.எம். நாயகம் தயாரித்த இரண்டு படங்கள், எஸ்.எம். நாயகம் தயாரித்த "மாதலன்", எஸ்.எம். நாயகத்தின் ஏனைய படங்கள், எஸ்.எம். நாயகத்தின் சினிமாப் பத்திரிகை எஸ்.எம். நாயகத்தின் ஆங்கிலப் பத்திரிகை ஆகிய 24 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.*

## ஊடகத்துறையில் தம்பிஐயா தேவதாசின் பணிகள்

*தம்பிஐயா தேவதாஸ் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் ஊடகவியல்துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். திரைப்படத்துறைக்கும் அப்பால் இவர் ஊடகத் துறைசார்ந்தும் சில நூல்களை எமக்கு வழங்கியிருக்கிறார்.*

**'இலங்கை வானொலியின் இனிய ஒலிபரப்பாளர்கள்'** *என்ற நூலின் முதலாம் பாகம் தம்பிஐயா தேவதாஸ் அவர்களால் வித்தியாதீபம் பதிப்பக வெளியீடாக 2015இல் வெளி வந்திருக்கிறது.*

*தினக்குரல் பத்திரிகையில் வாராந்தம் தொடராக வெளிவந்த இலங்கை வானொலியின் ஒலிபரப்பாளர்களின் வாழ்வும் பணியும் பற்றிய பதிவின் நூலுரு இதுவாகும். ஒலிபரப்புத்துறையில் களம்கண்ட 50பேர் பற்றிய பல்வேறு வரலாற்றுக்குறிப்புகள், விபரங்கள், புகைப்படங்கள் என்பன இந்நூலில் இடம்பெற்றுள்ளன. வெறுமனே அறிவிப்பாளர் களின் சாதனைப் பட்டியலாக மட்டுமில்லாது, அவர்களது பிறப்பு, குடும்பப் பின்னணி, கல்விச் சூழல், அறிவிப்புத் துறையில் அவர்கள் வெளிக்காட்டிய திறமைகள் என ஒரு அறிவிப்பாளனுக்குரிய பல பக்கங்களையும் சுருக்கமான முறையில் மிக நேர்த்தியாக தேவதாஸ் அவர்கள் வாசகர் களுக்குத் தொகுத்தளித்துள்ளார்.*

*சோ.நடராஜன், சோ.சிவபாதசுந்தரம், எஸ்.குஞ்சித பாதம், கே.எஸ்.நடராஜா, சானா.சண்முகநாதன்,*



எஸ்.சரவணமுத்து, வி.என்.பாலசுப்பிரமணியம், விவியன் எஸ். நமசிவாயம், வி.ஏ.கபூர், எஸ்.புண்ணியமூர்த்தி, வீ.ஏ.சிவஞானம், எஸ்.பி. மயில்வாகனன், வீ.சுந்தரலிங்கம், திருமதி செந்திமணி மயில்வாகனன், சி.வி.ராஜசுந்தரம், திருமதி ஞானம் இரத்தினம், வி.பி.தியாகராஜா, எஸ்.கே.பர ராஜசிங்கம், வீ.ஏ. திருஞானசுந்தரம், திருமதி பொன்மணி குலசிங்கம், வண.அரச ஐயாத்துரை, எம்.எச்.குத்தூஸ், ஜோர்ஜ் சந்திரசேகரன், இராஜகுரு சேனாதிபதி கனக ரெத்தினம், என்.சிவராஜா, திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன், செல்வி சற்சொரூபவதி நாதன், திருமதி இராஜேஸ்வரி சண்முகம், திருமதி புவனலோஜனி நடராஜசிவம், பி.எச்.அப்துல் ஹமீத், விமல் சொக்கநாதன், எஸ்.நடராஜ ஐயர், பி.விக்னேஸ்வரன், வீ.என். மதியழகன், கே.ஜெய கிருஷ்ணா, இளையதம்பி தயானந்தா, சி.நடராஜசிவம், அருணா செல்லத்துரை, மயில்வாகனம் சர்வானந்தா, எஸ்.விஸ்வநாதன், திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம், இரா. பத்மநாதன், எஸ்.எழில்வேந்தன், கே.எஸ்.ராஜா, காவலூர் ராஜதுரை, கே.எஸ்.சிவகுமாரன், ஆர்.சந்திரமோகன், சனூஸ் மொஹமட் பெஃரோஸ், பாலசிங்கம் பிரபாகரன், முருகேசு ரவீந்திரன் ஆகியோர் பற்றிய குறிப்புகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

*ஊடகவியல் தொடர்பாக தம்பிஐயா தேவதாஸ் அவர்கள் '**இலங்கையில் ஊடகவியல்**' என்ற பெயரில் ஒரு நூலை 2018 இல் வித்தியாதீபம் வெளியீடாக வழங்கியிருந்தார். இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராகவும், ரூபவாகினி தொலைக்காட்சிச் சேவையில் பேட்டி காண்பவராகவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத் துறைப் பகுதியில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றி அனுபவம் பெற்றிருந்த இவர் இலங்கையின் பத்திரிகையியல் வரலாற்றைச் சுருக்கமாக இந்நூலில் பதிவுசெய்திருக்கிறார். இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள், முஸ்லிம் அறிஞர்கள் ஆரம்பித்த பத்திரிகைகள், பிராந்தியப் பத்திரிகைகள், இலங்கையில் ஆங்கிலப் பத்திரிகைகள், சிங்களப் பத்திரிகைகள், இலங்கையில் வானொலிச் சேவை, இலங்கையில் தொலைக்காட்சிச் சேவை, இலங்கையில் தமிழ்த் திரைப்படங்கள் ஆகிய எட்டு கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

## மண்பற்றாளர் தேவதாஸ்

*திரு. தம்பிஐயா தேவதாஸ் அவர்கள் தான் பிறந்து வளர்ந்த இலங்கையின் வடபுலத்தில் உள்ள சப்ததீவுகளில் ஒன்றான புங்குடுதீவு மண்மீது தீராப்பற்றுக் கொண்டவர்.*

*புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் அவ்வூரின் ஆன்மீகக் கருவூலங்களுள் ஒன்றாகும். அவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் 30.3.2005 அன்று நடைபெற்ற வேளையில் அவ்வாலயத்திற்கான கும்பாபிஷேக மலரைத் தொகுக்கும் பெரும்பணியை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தினர் இவருக்கு வழங்கியிருந்தது.*

*இப்பணியை இவர் தனக்குக் கிட்டிய அருட்பணியாகக் கருதி மார்ச் 2005இல் 136 பக்கங்களில் அழகுறத்*

தொகுத்து வழங்கியிருந்தார்.




30.03.2005 அன்று இடம் பெற்ற கும்பாபிஷேக நிகழ்வின் போது வெளியிடப்பட்ட இம் மலரின் உள்ளடக் கம் கட்டுரைப் பகுதி, திருப்பணியாளர்கள் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. கட்டுரைப் பிரிவில் இராஜ ராஜேஸ்வரி அம்பாள் மேல் எழுந்த திருவூஞ்சல் (சி.ஆறு முகம்), புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய வரலாறு (சின்னத்தம்பி கோபாலபிள்ளை), புங்குடுதீவுக் கோயில் களும் பண்பாடும்: ஓர் வரலாற்றுக் கண்ணோட்டம் (வி.சிவ சாமி), புங்குடுதீவு என்ற பெயர் எப்படி வந்தது (தம்பி ஐயா தேவதாஸ்), தீவகம்- வரலாற்று நோக்கு (கா.குக பாலன்), சக்தி வழிபாடும் சாக்த தந்திரங்களும் (மா.வேத நாதன்), அறிவே தெய்வம் (முருக.வே.பரமநாதன்), மன்னார் முதல் மாத்தறை வரையில் பழம்பெரும் ஈஸ்வரங்கள் (த.மனோ கரன்), மனம் போல வாழ்வு (தங்கம்மா அப்பாக் குட்டி), இலங்கையில் சிறுதெய்வ வழிபாடு பெறும் முக்கி யத்துவம் (கி.புண்ணியமூர்த்தி), தெய்வீக வாழ்வு (நா.சோமாஸ்கந்தக் குருக்கள்), கலைகள் (த.இலங்கேஸ் வரன்), தெய்வீகத் திருத்தலங்கள் (கனகசபாபதி நாகேஸ் வரன்), இலங்கையில் இந்து சமயம் (கி.லக்ஷ்மண ஐயர்), கண்ணகியம்மன் கதை (நாகமணி சண்முகம்), கடவுளைக் காண்போமா? (ஈழத்து சிவாநந்தன்), மலர் மலர (மு.கனக சபாபதி), தேர் ஓடியது (சி.முத்துக்குமாரு) ஆகிய 18 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. திருப்பணியாளர்கள் என்ற பிரிவில் திருவிழா உபயகாரர்கள், தர்மகர்த்தாக்கள், பழைய நிர்வாக சபை யினர், நடப்புக்கால நிர்வாக சபையினர், கும்பாபிஷேக புனர்நிர்மாண செயலணிக் குழு, 2005ஆம் ஆண்டிற்கான

கும்பாபிஷேக ஒழுங்குபடுத்தல் குழு, வெளி நாட்டில் வாழும் ஆலய கும்பாபிஷேகப் பிரதிநிதிகள், Committee Members of the Paripaalana Sabai and Trustees ஆகிய 8 பட்டியல்கள் இடம்பெற்றிருந்தன.

இவர் 2006ஆம் ஆண்டில் எழுதியிருந்த '**புங்குடுதீவு வாழ்வும் வளமும்**' என்ற நூல், கொழும்பு, புங்குடுதீவு அபிவிருத்திச் சங்கத்தின் பிரசுரமாக ஓகஸ்ட் 2006இல் வெளியிடப்பட்டது. புங்குடுதீவின் கோவில்கள், பாடசாலைகள், சமயப் பெரியார்கள், வர்த்தகர்கள், கல்வியியலளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், துறைசார் விற்பன்னர்கள், சமூக அமைப்புகள் என்று பல்வேறு வரலாற்றுத் தகவல்களையும் புகைப்பட ஆவண உதவியுடன் இவர் பதிவாக்கியுள்ளார். புங்குடுதீவின் கதை, பெயர் வந்த காரணம், நிர்வாகம், தொழில்கள், போன்ற 24 தலைப்புகளில் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் புங்குடுதீவின் 11ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் அவ்வூரின் உள்வீட்டுப் பிள்ளையாக வளர்ந்தவர். அங்கு இவர் பெற்ற அனுபவங்களும் பெரியார்களின் தொடர்புகளும் இவருக்கு இந்நூலை எழுத வாய்ப்பாகிப் போனது.

## நாட்டார் இலக்கியங்களில் இவருக்கிருந்த ஆர்வம்

தம்பிஐயா தேவதாஸ் அவர்கள் ஈழத்தின் நாட்டார் இலக்கியத்திலும் ஆர்வம் மிக்கவர். அதன் விளைவாக பழமொழிகள் தொடர்பாக இரண்டு நூல்களை இவரால் வெளியிட முடிந்துள்ளது.

2005 ஏப்ரலில் இவர் '**சிங்களப் பழமொழிகள்**' என்ற நூலை வித்தியாதீபம் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட்டிருந்தார். இந்நூலில், நாளாந்த வழக்கிலுள்ள 815 சிங்களப் பழமொழிகளும் அவற்றிற்கான பொருள்விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. சிங்களப் பழமொழிகளின் மூலவடிவத்தை



தராமல் அதனை தமிழுக்கு மொழிபெயர்த்துத் தந்து அதற்கான விளக்கத்தைத் தந்திருப்பது சிலரது விமர்சனத்திற்கு வழிசமைத்திருக்கக் கூடும்.

திரு தேவதாஸ் அவர்கள் **'இணைப் பழமொழிகள் (சிங்களம்-தமிழ்)'** என்ற பெயரில் ஏப்ரல் 2009இல் மற்றொரு நூலை வெளியிட்டிருந்தார். இந்நூலில் தமிழ்-சிங்கள மொழிகளில் ஒத்த கருத்துடைய பழமொழிகளை பட்டியலிட்டுள்ளார். முன்னைய நூலில் போலல்லாது இந் நூலில் சிங்களப் பழமொழிகளை சிங்கள மொழியிலேயே வழங்கி அதன் கருத்தை தமிழில் தந்து அந்தக் கருத்துக்கு நிகரான தமிழ்ப் பழமொழியையும் தந்திருக்கிறார். சிங்கள மொழி தெரியாதவர்களுக்கும் அதன் நேரடி அர்த்தம் தமிழில் உள்ளதால் வாசித்து ருசிக்க இலகுவாக அமைகின்றது. மொத்தம் 369 பழமொழிகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

திரு தம்பிஐயா தேவதாஸ் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல், தமிழ், இந்து கலாச்சாரம் ஆகிய

பாடங்களைப் பயின்று பட்டம் பெற்றவர். பின்னர் மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தில் கல்வி டிப்ளோமா பட்டத்தை யும் பெற்றிருந்தார். கல்வித்துறையில் ஆசிரியராகப் பணி யாற்றிய இவர், கொழும்பு, கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த தமிழ் வித்தியாலயம், கொழும்பு 12- கணபதி இந்து மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தனது கல்விப்புலத்திலும் ஒரு நூலை எழுதியிருக்கிறார். இவர் கொழும்பு, கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணி யாற்றிய வேளையில் க.பொ.த உயர்தர தமிழ்மொழி மாணவர்களின் பயன்பாட்டுக்கென எழுதியிருந்த நூல் இது வாகும். அக்காலகட்டத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக புனைகதை இலக்கியங்கள், பாட விதானக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு பாடவிதானத் தில் சேர்க்கப்பட்டிருந்தமை தமிழ்ப் பாடவிதானத்தில் முக்கிய திருப்பமாக அமைந்திருந்தது. அவ்வகையில் தமிழகப் படைப்பாளியான ஆர்.ஷண்முகசுந்தரம் அவர்கள் எழுதிய "நாகம்மாள்" நாவல் பாடவிதானத்தின் முக்கிய இடத்தினை வகித்துள்ளது. கொங்குநாட்டுக் கிராமிய மக்கள் வாழ்க்கையை பேச்சுத் தமிழில் பல நாவல்களில் பதித்த பெருமைக்குரியவர் இந்த இந்திய எழுத்தாளர் ஆர்.ஷண்முகசுந்தரம் அவர்களாவார். இந்நாவல் முழுவதும் கிராமிய மணம் கமழ்ந்த, இலக்கியப் பிரவாகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. "தேர்ந்த சிறுகதைகளும் நாகம்மாள் நாவலும் ஒரு நோக்கு" என்ற தலைப்பில் ஜனவரி 1998இல் வித்தியாதீபம் பதிப்பகத்தின் வழியாக தம்பிஐயா தேவதாஸ் அவர்களால் வெளியிடப்பட்டிருந்த இந்நூலில் புதுமைப் பித்தன் எழுதிய "ஒரு நாள் கழிந்தது", கு.ப.ராஜகோபாலன் எழுதிய "கனகாம்பரம்", கு.அழகிரிசாமி எழுதிய "தவப் பயன்", இலங்கையர்கோன் எழுதிய "வெள்ளிப் பாதசரம்",



சி.வைத்திலிங்கம் எழுதிய "பாற்கஞ்சி" ஆகிய சிறுகதைகள் பற்றியும், ஆர்.சண்முகசுந்தரம் எழுதிய "நாகம்மாள்" நாவல் பற்றியும் தனது திறனாய்வுக் கருத்துக்களை அவர் வழங்கி யிருக்கிறார்.

திரு. தம்பிஐயா தேவதாசின் எழுத்துலகம் பரந்து விரிந்த ஒன்றாகும். ஆரவாரமற்று அமைதியதாகத் தனது ஆக்கபூர்வமான படைப்பிலக்கியங்களை நமக்கு வழங்கி வரும் தம்பிஐயாவின் பிரசுரங்கள் அனைத்தும் உரியவர் களின் கரங்களைச் சென்றடைந்துள்ளனவா என்பதையிட்டு எனக்கு மிகுந்த ஐயப்பாடு உள்ளது. இலங்கையின் படைப் பிலக்கியகாரர்களின் துரதிர்ஷ்டம் என்னவெனில் அவர் களில் பெரும்பாலானவர்கள் எழுத்தாள வெளியீட்டாளர் களாக (Author Publishers) இயங்குவதாகும். நிறுவனரீதியாக இப்படைப்பாளிகளின் அரிய ஆவணங்களைப் பெற்று அதனை அவர்சார்பில் வெளியிட்டு வைக்கத் தயாரான தமிழ் வெளியீட்டகங்கள் எம்மிடம் இல்லை. ஆழமாக நோக்கி னால் வெளியீட்டகங்கள் என்று இயங்கும் பெரும்பாலான இலங்கைப் பதிப்பு நிறுவனங்கள், ஆசிரியரின் முதலில் நூல் களை அச்சிட்டு வழங்குபவையாகவே காணப்படுகின்றன. அத்தகைய "வெளியீட்டகங்கள்" எவையும் தமக்கிடையே தரமான விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சக்தியற்றவையாகவே காணப்படுகின்றன.

ஈழத்துப் படைப்பாளிகளும், புகலிட படைப்பாளிகளும் இணைந்து கூட்டுறவு அடிப்படையில் நல்லதொரு விநியோக வலையமைப்புடன் கூடிய புத்தக வெளியீட்டு நிறுவனங்களை உருவாக்கினாலெயன்றி தம்பிஐயா தேவதாஸ் போன்ற தனிமனித வெளியீட்டு முயற்சிகள் பலவும், தமது மாவட்டங்களையே தாண்டமுடியாத நிலைமைக்கு ஈழத்துப் படைப்புலகினை எதிர்காலத்தில் இட்டுச்செல்லும்.

(முற்றும்)

தேவதாஸ் அவர்கள் எம்மிடையே வாழும் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம் என்பேன். குறிப்பாக, ஈழத்துத் தமிழ் சிங்களத் திரைப்படத்துறை சார்ந்த ஏராளமான ஆவணங்களையும், புகைப்படங்களையும் பேணிப் பாதுகாத்து வைத்திருக்கும் ஒரு பெட்டகம் அவர் என்றால் அது மிகையாகாது.

9789550958627
9789550958627